# கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை
# சட்ட பீடம்
# சட்டமாணி பரீட்சை, ஆண்டு I– 2022
# குற்றவியல் சட்டம்

(மூன்று மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: 06

**மூன்று** வினாக்களுக்கு **மட்டும்** விடை தருக.
(தெளிவற்ற கையெழுத்துக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்)

---

1. விமல் என்பவனின் 20 வயது மகனான சமல் என்பவன் மனநலம் பாதிக்கப்பட்டவனாயிருந்தான். ஆகவே, சமலிடமிருந்து தீய ஆவியை அப்பால் விரட்டியடிப்பதற்காக நடத்தப்படும் 'தொவில்' எனும் சடங்கை நடத்துவதற்காக கருணா குருண்ணான்சே எனப்படும் ஆவித்தொடர்புள்ள ஒருவரையும் அவரது உதவியாளரனான பெருமாள் ஐயர் என்பவரையும் விமல் பணிக்கமர்த்தினான். சடங்கு நடைபெறும் தினத்தன்று விமல் மற்றும் அவனது நண்பனான தாரன் ஆகிய இருவரும் மது அருந்தினர். அன்று நள்ளிவு கருணா சமலை அருகிலுள்ள மயானத்துக்கு அழைத்து செல்லுமாறு பெருமாள் மற்றும் விமல் இருவருக்கும் அறிவுறுத்தினான். சுயநினைவிழந்த நிலையிலிருந்ததாகக் கருதப்படும் கருணா மற்றும் பெருமாள் இருவருமாக மயானத்தில் வைத்து சமலைத் தாக்க ஆரம்பித்ததுடன் அவனுக்கு கடுமையான ஊறேற்படுத்தினர். அதேவேளை, சடங்குகளை இரகசியமாகப் பார்ப்பதற்காக மயானத்துக்கு வந்திருந்த தாரன் கல்லறையொன்றுக்கு பின்னால் ஒழிந்திருந்தான். பேயுரு எனத் தவறாக அடையாளப்படுத்திய விமல் தாரனை இரும்புக்கம்பியொன்றால் தாக்கினான். மேலும் காயப்படுத்தப்படுவதிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காக தாரன் விமலை பெரிய கல்லொன்றினால் தாக்கினான். விமல் மற்றும் தாரன் ஆகியோர் கடுமையான காயங்களுடன் உயிர்த்தப்பிய போதிலும் சமல் வைத்தியசாலையில் மரணமடைந்தான்.

   இலங்கையின் தண்டனைச்சட்டக் கோவையின் ஏற்பாடுகள் மற்றும் பொருத்தமான தீர்ப்புச்சட்டங்கள் மீது குறிப்பாகக் கவனஞ்செலுத்தி கருணா, பெருமாள்,விமல் மற்றம் தாரன் என்போரின் குற்றப்பொறுப்புடைமைகளை ஆராய்க.

(100 புள்ளிகள்)

2. நேர்மையீனமென்பது ஆதனத்துக்கெதிரான பெரும்பாலான குற்றங்களினது முக்கியமானதொரு அம்சமாகக் காணப்படுவதுடன் அது புறவயமாகவன்றி (objective terms) அகவயமாகவே (subjective terms) வரையறுக்கப்படுகிறது.

மேற்போந்த கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? இலங்கை தண்டனைச்சட்டக் கோவையிலுள்ள ஆதனத்துக்கெதிரான குற்றங்கள் மற்றும் பொருத்தமான தீர்ப்புச் சட்டங்களுடன் தொடர்புறுத்தி உமது விடையினை ஆராய்க.

(100 புள்ளிகள்)

3. அயேஷ் என்பவன் 14 வயதுடைய பாடசாலை சிறுமியான விமலா என்பவளுடன் காதல் தொடர்பொன்றில் ஈடுபட்டிருந்ததுடன், இருவரும் உள்ளூர் தாவரவியல் பூங்காவில் நேரத்தை செலவிடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். ஒருநாள் அயேஷ் விமலாவை அவனது வீட்டுக்கு அழைத்தானென்பதுடன் விமலா அவளது பெற்றோருக்கும் தெரிவிக்காமல் அவளாகவே அயேஷின் வீட்டுக்குச் சென்றாள். அயேஷின் வீட்டுக்குள் விமலா நுழைந்தவுடனேயே அயேஷ் கதவைத் தாளிட்டதுடன் விமாலாவை அறையொன்றுக்குள் அவன் அழைத்துச் சென்றான. அயேஷினுடைய நான்கு நண்பர்களை அங்கு விமலா கண்டாள். பின்பு அயேஷ் விமலாவுக்கு மதுபானம் வழங்கினானென்பதுடன் விமலா அதனை மறுத்தாள். பின்னர் அயேஷ் அவனது நண்பர்களின் உதவியுடன் விமலாவின் கைகளையும் கால்களையும் கயிற்றால் கட்டி கந்தல் துணியால் வாயையும் கட்டினான். இரண்டு நாட்களுக்குப் பின்னர் விமலா சுயநினைவற்ற நிலையில் அருகிலிருந்த சேரிப்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டாள். ஒரு இரும்புக் கம்பியொன்றால் ஏற்படுத்தப்படக் கூடியதான கடுமையான தலைக்காயம்; இடது கண்ணில் நிரந்தரமான பார்வையிழப்பு; கால்கள் மற்றும் முகத்தில் பதினாறு காயங்கள் போன்ற பாரிய காயங்கள் பல அவளக்கு ஏற்பட்டிருப்பதை மருத்துவ அறிக்கையானது வெளிப்படுத்தியது. மேலும், விமலா ஐவரால் பாலியல் வல்லுறவுக்க உள்ளாக்கப்பட்டிருப்பதனையும் அவ்வறிக்கை வெளிப்படுத்தியது.

நியதிச்சட்ட ஏற்பாடுகள் மற்றும் பொருத்தமான வழக்குச் சட்டங்களை ஆதாரங்காட்டி அயேஷ் மற்றும் அவனது நான்கு நண்பர்களின் குற்றப்பொறுப்புடைமையை ஆராய்க.

(100 புள்ளிகள்)

4. கடும்பொறுப்புக் குற்றமொன்றினை உண்டாக்குவதற்கான விசேடமான குறிக்கோள்கள் காணப்படுவதுடன், அவை பொதுவாகவே குற்றமனமென்ற தேவைப்பாடொன்றை தவிர்ப்பதன் மூலமே எய்தப்படுகின்றன. மேலும் கடும்பொறுப்புக் கோட்பாட்டின் பிரயோகமானது வெவ்வேறு நியாயாதிக்கங்களில் மாறுபடுவதாயிருக்கின்றது.

மேற்போந்த கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? இலங்கை மற்றும் ஐக்கிய இராச்சியத்தின் பொருத்தமான சட்டவாக்கம் மற்றும் வழக்குச் சட்ட உதாரணங்களை குறிப்பாக ஆதாரங்காட்டி ஆராய்க.

(100 புள்ளிகள்)

5. **(அ) மற்றும் (ஆ)** இரண்டுக்கும் விடையளிக்குக.

(அ) இலங்கையின் தண்டனைச்சட்டக் கோவையின் 490 ஆம் பிரிவானது சாத்தியமற்ற குற்றமுயற்சிகள் தொடர்பில் எவ்வேறுபாட்டையும் செய்யவில்லை. 490 ஆம் பிரிவின் கீழான எடுத்துக்காட்டுக்கள் இரண்டுமே குற்ற முயற்சியெனும் குற்றமொன்றின் குற்றச்செயலுக்கான உதாரணங்களாக மாத்திரமே கருதப்படுகின்றன. ஆயினும், சட்டப்பிரிவோ எடுத்துக்காட்டுக்களோ சாத்தியமற்ற குற்றமுயற்சியொன்றின் மூலக்கூறுகள் தொடர்பில் சுய விளக்கமளிப்பதில்லை. ஆகவே, இலங்கையில் சாத்தியமற்ற குற்றமுயற்சிகளின் பொருத்தப்பாடென்பது இன்னமும் ஒரு புதிராகவே உள்ளது.

மேற்போந்த கூற்றை இலங்கையின் சட்டத்தை வேறு ஏதேனுமொரு நியாயாதிக்கத்துடன் ஒப்பிடுவதனூடாக நுணுக்கமாக ஆராய்க.

(ஆ) தண்டனைச்சட்டக் கோவையின் பிரகாரம், தூண்டுகையென்பது வெவ்வேறு விதங்களில் இடம்பெறலாம். நீதிமன்றங்கள் இவ் வேறுபட்ட விதங்களை நீதித்துறை பொருள்கோடல்கள் ஊடாக தெரிந்துகொண்டுள்ள அதேவேளையில் அதனுடைய நடைமுறை அம்சங்களையும் எடுத்துரைக்கின்றன.

மேற்போந்த கூற்றை தண்டனைச்சட்டக் கோவையின் பொருத்தமான ஏற்பாடுகள், விளக்கங்கள் மற்றும் வழக்குச் சட்டங்களின் மீது குறிப்பாக கவனஞ்செலுத்தி ஆராய்க.

(100 புள்ளிகள்)

6. பிரியா மற்றும் குமார இருவரும் டேட்டிங் இணையத்தளம் ஒன்றினூடாக சந்தித்ததுடன், தான் பொருத்தமான வேலையொன்றை தேடிக்கொண்டதன் பின்னர் பிரியாவை மணந்து கொள்வதாக குமார வாக்களித்ததன் மேல் அவள் குமாரவுடன் இணைந்து வாழத் தொடங்கினாள். மாதங்கள் கடந்தும் குமார பிரியாவை மணந்து கொள்வதிலோ வேலையொன்றை தேடிக்கொள்வதிலோ அக்கறை காட்டாமையால் இருவருக்கிடையிலம் பிணக்குகள் இடம்பெறத் தொடங்கின. பின்னர், பிரியா டேட்டிங் இணையத் தளமொன்றின் சந்தித்தவனான றுவன் என்பவனுடன் உறவொன்றில் இருப்பதை குமார கண்டறிந்ததுடன் அது பிரியா மற்றும் குமார இடையிலான மோதல்களை அதிகப்படுத்தியது. ஒருநாள் பிரியா அவள் றுவனுடன் அன்றைய இரவை கழிக்கவிருப்பதால் அன்றைய தினம் வீட்டுக்கு வரவில்லையெனும் குறுந்தகவலை குமாரவுக்கு அனுப்பியிருந்தாள். அதற்கடுத்த நாள் பிரியா வீட்டுக்கு திரும்பி வந்தபோது, இருவரும் வாக்குவாதத்தில் ஈடுபட்டதுடன் அச்சந்தர்ப்பத்தில் பிரியா 'நீ ஆண்மையற்றவன்' எனக் கூறினாள். இதனைச் செவிமெடுத்த குமார உடனடியாக மேசை மீதிருந்த கத்தியை எடுத்து பிரியாவை குத்தியதுடன் அவளுக்கெற்பட்ட காயங்களால் பிரியா இறந்தாள்.

குமாரவுக்கு ஆலோசனை வழங்குக.

(100 புள்ளிகள்)

****